பரிசுத்த பவுல் ஆலயம் - குவைத்

அஹமதி தமிழ் திருச்சபை







மாத இதழ்

மே 2014

மலர் 14

இதழ்: 13


# என் மீட்பர் உயிரோடிருக்கிறார்

யோபு. 19:25

# உங்கள் சகோதரர் சிந்தனையில்



கிறிஸ்து இயேசுவின் நாமத்தில் வாழ்த்துக்கள். தேவனுடைய பெரியதான கிருபையினால் 2014-ம் வருடத்தின் 5-வது மாதத்தில் பிரவேசிக்கும் பாக்கியத்தை தேவன் தந்திருக்கிறார். கடந்த மாதம் முழுவதும் நடந்த ஆராதனைகள், ஊழியங்கள் எல்லாவற்றிலும் தேவ ஆசீர்வாதம் இருந்ததற்காய் கர்த்தருக்கு ஸ்தோத்திரம் செலுத்துவோம். இந்த மாதம் நடக்கவிருக்கும் சபையின் ஊழியங்கள், ஆராதனைகள், பொதுமன்றக் கூடுகை போன்ற விசேஷித்த கூடுகைகளுக்காய் ஜெபித்துக் கொள்வோம். புதிய செயற்குழு மற்றும் விதிமுறை கண்காணிப்பாளர் தெரிந்தெடுப்புக்காய் ஜெபித்துக் கொள்வோம்.

**“மரியாள் தன்னைவிட்டு எடுபடாத நல்ல பங்கைத் தெரிந்து கொண்டாள்”** (லூக். 10:42). எத்தனையோ தெரிந்தெடுப்புகள் நம்முடைய வாழ்க்கையில் செய்ய வேண்டியிருக்கிறது. அதை நாம் எப்படி தெரிந்து கொள்கிறோம்! ஆனால் மரி யாள் தன்னைவிட்டு எடுபடாத நல்ல பங்கை தெரிந்து கொண்டதாக இயேசு கூறுகிறார். ஆதாம், ஏவாளுக்கும் முன் ஒரு தெரிந்தெடுக்கும் சூழ்நிலையை தேவன் வைத்தார். தேவன் உண்டாக்கின கனியா! அல்லது தேவனா! இதில் ஏவாள் எதை தெரிந்து கொண்டாள் என்று நாம் அறிந்திருக்கிறோம். அதன் மூலம் கிடைத்த தண்டனையையும் நமக்கு தெரியும். அழிந்து போகிற உலக காரியமல்ல நமது தெரிந்து கொள்ளுதல். அது நித்ய ஜீவனுக்கு ஏதுவானதாக இருக்க வேண்டும். மரியாள் மூன்று முக்கிய சூழ்நிலைகளில் இயேசுவோடு இடைபட்டதை வேதத்தில் காண முடியும்.

1. இயேசு கிறிஸ்துவுக்கு விருந்தளிக்கும் சூழ்நிலை (லூக். 10:38-42)
2. லாசரு இறந்துபோய் உயிரடையும் சூழ்நிலை (யோவா. 11:32)
3. பஸ்காவுக்கு 6 நாளைக்கு முன் பந்தியிருக்கும் இயேசுவை அபிஷேகம் பண்ணும் சூழ்நிலை (யோவா. 12:1-8). மூன்று சூழ்நிலைகளிலும் தேவ குமாரனின் பாதத்தண்டையில் இருக்கிறாள்.

1. லூக். 10:38-42 முதல் சூழ்நிலையில் அவர் பாதத்தில் அமர்ந்து இயேசுவின் வார்த்தைகளைக் கேட்டுக் கொண்டிருக்கிறாள். இது வசன தியானத்தைக் குறிக்கிறது. ஆனால் மார்த்தாள் பற்பல வேலைகளை செய்கிறாள். அதுபோல் அநேகர் இயேசுவுக்காய் பல ஊழியங்களை செய்யலாம். ஆனால் அவர் பாதத்தில் அமர்ந்து வசனத்தை முதலில் கேட்க வேண்டும். இதுதான் தேவையான ஒன்று என்று இயேசு கூறுகிறார்.

2. யோவா.11-ம் அதிகாரம் இரண்டாவது சூழ்நிலை இயேசு லாசருவை உயிரோடு எழுப்ப வரும்போது ஓடிச்சென்று அவர் பாதத்தில் விழுந்து முறையிடுதல். இது ஜெப ஜீவியத்தைக் காண்பிக்கிறது. வேதனையின் மத்தியில் பிரச்சனைகளுக்காய் புலம்பாமல் இயேசுவின் பாதத்தில் வந்து ஜெபிக்க வேண்டும். மற்றவர்கள் நினைத்தார்கள் கல்லறையினிடத்திற்கு அழுகிறதற்கு போகிறாள் (யோவா. 11:31) என்று. ஆனால் மரி யாள் மரித்துப் போன பிரச்சனையைத் தேடிப் போகாமல் அதை உயிரடையச் செய்யும் இயேசுவின் பாதத்தில் மரியாள் விழுந்து ஜெபித்தாள்.

3. யோவா. 12:1-8 பஸ்காவுக்கு ஆறு நாளைக்கு முன் பந்தியிலிருக்கும் இயேசுவை அபிஷேகம் பண்ணினாள். அது ஆண்டவருக்கு செய்யும் ஆராதனையைக் காட்டுகிறது.

நாமோ யாக்கோபின் குடும்பத்துக்குத் தமது முகத்தை மறைக்கிற கர்த்தருக்காகக் காத்திருந்து; அவருக்கு எதிர்பார்த்திருப்பேன். -ஏசா. 8:17

இந்த மூன்று சூழல்களிலும் மரியாள் இயேசுவின் பாதத்தில் இருந்தாள். வேத தியானம், ஜெபம், ஆராதனை. மூன்று சூழ்நிலைகளிலும் மற்றவர்களினால் விமர்ச்சனம் பண்ணப்பட்டாள். ஆனால் அவளின் கவனம் எதிலும் செல்லவில்லை. தேவ குமாரனின் பிரசன்னத்தையே அவள் கவனமாய் தேடினாள். கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே! நாமும் இந்த மரியாளைப்போல வேத வாசிப்பு, ஜெபம், ஆராதனை போன்ற சூழ்நிலைகளில் ஆண்டவரின் பாதத்தையே அண்டிக் கொள்வோம். அப்படி அண்டிக் கொள்ளும் போது பல விமர்சனங்கள் வரலாம். ஆனால் ஆண்டவர் நம்மை பார்த்து தேவையானது ஒன்றே அதை தெரிந்து கொண்டாய் என்று கூறும் சத்தத்தைக் கேட்க முடியும். கர்த்தர் தாமே நம்மை ஆசீர்வதிப்பாராக.

**கிறிஸ்துவுக்குள்**
**அன்பு சகோ. ரவிச்சந்திரன்**



## பதில் சொல்லுங்க

( தயவு செய்து எல்லாவற்றிலும் அதிகாரம் மற்றும் வசனம் ஆகியவற்றை மறக்காமல் குறிப்பிடவும் )

1. எவைகளை வாங்க வேண்டும்? எதை விற்கக் கூடாது?
2. ஜீவ ஊற்று எது? ஜீவ ஊற்று எங்கிருந்து புறப்படும்?
3. யாருடைய விருந்தாளிகள் நரக பாதாளங்களில் கிடக்கிறார்கள்?
4. யாருடைய கண்களைக் கழுகின் குஞ்சுகள் தின்னும்?
5. யாரை நாம் விடுவிக்கக் கூடுமானால் விடுவிக்க வேண்டும்?
6. யாருடைய வேர் அசையாது? யாருடைய வேர் கனி கொடுக்கும்?
7. லேமுவேலின் தாய் அவன் பெலனை யாருக்கு கொடுக்கக் கூடாது என்று போதிக்கிறாள்?
8. உன் சகோதரி யார்? உன் இனத்தாள் யார்?
9. நம் ஆத்துமாவை இடுக்கண்களுக்கு காத்துக்கொள்ள வேண்டுமானால் நாம் எதைக் காத்துக் கொள்ளவேண்டும்?
10. ஆகூர் தன் உபதேசத்தில் எந்த இரண்டு மனுவைக் கர்த்தரிடத்தில் கேட்கிறார்?
11. கோபாக்கினை நாளில் எது உதவாது?
12. யாருடைய கண்களுக்கு கர்த்தர் வெளிச்சம் கொடுக்கிறார்?
13. யாருடைய ஜெபம் கர்த்தருக்குப் பிரியமானது?
14. மூடனுடைய கோபம் எவ்விரண்டைக்காட்டிலும் பாரமாயிருக்கும்?
15. புருஷனுடைய கிரீடம் யார்? முதியோரின் கிரீடம் யார்?

குறிப்பு:- வேதாகமத்தில்... நீதிமொழிகளில் பதிலைத் தேடுங்கள்; காணலாம். சரியான விடைகளை வருகிற 23-05-2014 ம் தேதிக்குள் சபையின் செயலாளரிடம் நேரில் தெரிவிக்கவும்.

## சிரி.... சிந்தி

**புழு மீனிடம் மாட்டிக் கொண்டது: மீன் மனிதனிடம் மாட்டிக் கொண்டது: புழு பொறுத்திருந்தது... மனிதன் மண்ணுக்குள் வரும்வரை.** - **அஹமதி தமிழ் திருச்சபை**

மரண இருளின் தேசத்தில் குடியிருக்கிறவர்களின்மேல் வெளிச்சம் பிரகாசித்தது. ஏசா. 9:2





## உயிரோடிருக்கிறவர்

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமானவர்களே! அன்பின் சொரூபியாம் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் என் அன்பின் நல்வாழ்த்துக்கள். சென்ற மாதம் முழுவதும் இயேசு கிறிஸ்துவின் அன்பை பலவிதங்களில் தியானித்து, பலவிதங்களில் நம்மை ஒடுக்கி லெந்து நாட்களை முடித்துவிட்டோம். மரணத்தை ஜெயமாக வென்ற இயேசு கிறிஸ்து இன்றும் ஜீவிக்கிறவராக, **"மரித்தேன் ஆனாலும் சதாகாலங்களிலும் உயிரோடிருக்கிறேன்"** (வெளி. 1:18) என்று நமக்கு மிகுந்த தைரியம் கொடுக்கிறவராய் இருக்கிறார்.

லெந்து நாட்களில் அநேகர் மாமிசம் உண்பதை தவிர்த்தும், அநேகர் பூச்சூடுவதை தவிர்த்தும் வெளியரங்கமாக நம்மை ஒடுக்கியிருந்தோம். ஆனால் நம்முடைய வாயின் வார்த்தைகளினால் பிறரை புண்படுத்தியிருக்கிறோமா! அல்லது குற்றப்படுத்தியிருக்கிறோமா! வேதத்தை தியானித்திருக்கிறோமா! அல்லது வேதத்தை மற்றவருக்கு அறிவித்திருக்கிறோமா! என்று நம்மை நாமே ஆராய்ந்து பார்ப்பது நலம். **நம்முடைய இருதயமே நம்மை குற்றவாளி என்று தீர்க்குமானால், நம்முடைய இருதயத்திலும் பெரியவராயிருந்து சகலத்தையும் அறிந்திருக்கிறார்** (1யோவா. 8:20). நம்முடைய இருதயம் நம்மை குற்றவாளியென்று தீர்க்காதிருந்தால், அவர் கற்பனைகளைக் கைக்கொண்டு அவருக்குப் பிரியமானவைகளைச் செய்து அவரை சந்தோஷப்படுத்துவோமானால் நாம் தைரியமாக அவரிடத்தில் வேண்டிக் கொள்வதோடு அதை பெற்றுக் கொள்ளவும் முடியும். இதைத்தான் 1யோவான் 3:21–21 வசனங்களில் பார்க்கிறோம்.

பக்தனாகிய யோபுவுக்கு இந்த தைரியம் காணப்பட்டது. மட்டுமல்லாமல் தான் மற்றவர்களை எந்த விதத்தினாலாவது புண்படுத்தியிருக்கிறேனா! என்று தன்னைத்தான் சோதித்துப் பார்த்தபடியால் மன உறுதியோடு தெளிவாக, தைரியமாக சொல்கிறார், **"என் மீட்பர் உயிரோடிருக்கிறார் என்றும் அவரை என் சொந்த கண்களால் பார்ப்பேன்"** (யோபு. 19:25) என்றும். கர்த்தரை நம்புகிறவர்கள் எந்த சூழ்நிலையிலும் அசையாத சீயோன் பர்வதத்தைப் போலவும், பர்வதங்கள் எருசலேமை சுற்றிலும் பாதுகாவலாக இருப்பதுபோல் கர்த்தர் தம்மை நம்புகிறவர்களுக்கு பாதுகாவலாக இருக்கிறார் (சங். 125:1–2). யோபு தன் நெருக்கத்தின் மத்தியில் சொல்கிறார், "எனக்கு துன்பம் நேரிட்ட நேரத்தில் கர்த்தரை நான் எங்கு தேடியும் காணக்கூடாதபடி ஒளித்திருக்கிறார். அவர் நியதியை விட்டு நான் பின்மாறவில்லை. அவருடைய கற்பனைகளை விட்டு நான் பின்வாங்கவில்லை. அவருடைய வார்த்தைகளைக் காத்து நடந்தேன்". நான் போகும் வழியை அவர் அறிவார். இது என்னுடைய சோதனைக் காலம். இதை பொறுமையோடு கடந்து போவேனாகில் பொன்னைப்போல விலை மதிப் பற்றவனாக கர்த்தர் மாற்றுவார் என்று விசுவாச அறிக்கையிடுகிறார் (யோபு. 23:8, 9, 11, 12).

யோபுவின் சூழ்நிலைகளை பார்க்கும்போது வேதனை நிறைந்த வாழ்க்கை. "தேவனை தூஷித்து ஜீவனைவிடு" என்று மனைவியின் ஈட்டி போன்ற கூர்மை

அநியாயமான தீர்ப்புகளைச் செய்கிறவர்களுக்கும்; கொடுமையான கட்டளைகளை எழுதுகிறவர்களுக்கும் ஐயோ!.ஏசா. 10:2

யான வார்த்தை, பெற்ற பிள்ளைகளின் அன்பும் ஐக்கியமும் எல்லாம் நஷ்டப்பட்ட சூழ்நிலை, நண்பர்களின் குத்தலான நயவஞ்சகமான பேச்சுக்கள். மந்தையைக்காக்கும் நாய்களைவிட கேவலமானவர்கள்கூட பரியாசம் பண்ணுகிறார்கள் (யோபு: 30:1). நான் ஊனமுற்றவர்களுக்கும் திக்கற்றவர்களுக்கும் உதவியாயிருந்தேன். எளியவர்களின் வழக்கை தகப்பனைப்போலிருந்து நீதியாய் நியாயம் தீர்த்தேன் (யோபு. 29:15). ஆனால் இப்போதோ என் முகத்தில் துப்பக்கூட ஜனங்கள் தயங்கவில்லை (யோபு. 30:10). ஆனாலும் நான் யாதொருவனை அவன் ஆபத்திலே தவிக்கப்பண்ணினதும், துன்னாளைக் (துன்பத்தின் நாளை) கண்டவனுக்காக அழாதிருந்ததும், எளியவனுக்காக ஆத்துமா வியாகுலப்படாதிருந்ததும் உண்டானால் அவர் என் மனுவுக்கு இடங்கொடாமல் எனக்கு விரோதமாய் தம் கையை நீட்டுவாராக (யோபு. 30:24–25). ஆனாலும் எனக்குக் குறித்திருக்கிறதை அவர் நிறைவேற்றுவார் (யோபு. 23:14). இப்படிப் பட்டவைகள் இன்னும் அநேகம் அவரிடத்தில் உண்டு.

என் அன்பு விசுவாசியே! யோபுவை போன்ற கொடிய வேதனைகளின் ஊடாக நீ கடந்து செல்லலாம். வேதனைகள் கர்த்தர் உனக்கு வைத்திருக்கும் சோதனைகள் என்பதை மறந்து விடாதே. சோதனையாகிய இந்த விதமான தேர்வுகளில் நீ வெற்றி பெற வேண்டுமானால் உன் உதடுகளின் வாக்கை காத்துக்கொள். **“மரணமும் ஜீவனும் நாவின் அதிகாரத்திலிருக்கும்: அதில் பிரியப்படுகிறவர்கள் அதின் கனியைப் புசிப்பார்கள்”** (நீதி. 18:21). உயிர்த்தெழுந்த ஞாயிறு ஆராதனையில் பாடினதுபோல “உயிருடன் எழுந்த மீட்பர் இயேசென் சொந்தமானாரே” என்று விசுவாசத்துடன் பாடிக்கொண்டிருப்போம். சொந்தங்கள், சமுதாயம், சபை உன்னைக் கைவிட்டாலும் சர்வ ஜீவன்களுடைய சுவாசத்தையும் தன்னிடத்தே வைத்துள்ள நமது பரலோக நாதர் உன் சொந்தமாயிருக்க நீ ஏன் கலங்குகிறாய்!.

விசுவாசத்தோடு **“என் மீட்பர் உயிரோடிருக்கிறார்”** என்று கெம்பீரமாய் ஆர்ப்பரித்து, “என் மீட்பர் உயிரோடிருக்கையிலே எனக்கென்ன குறை உண்டு நீ சொல் மனமே” என்று ஆத்துமாவைத் தேற்றிக் கொள். விரல் நீட்டுதலையும் நிபச்சொல்லையும் நீ அகற்றிவிட்டால் நீ கூப்பிடும் போது கர்த்தர் கேட்பது மாத்திரமல்ல, உன் ஆத்துமா மிகவும் வறட்சியாய் இருக்கும்போது உன் ஆத்துமாவை திருப்தியாக்கி, உன்னை பெலப்படுத்தி, நீர்ப்பாய்ச்சலான தோட்டத்தைப் போலவும், வற்றாத நீரூற்றைப்போலவும் மிகவும் செழிப்பாகவும் மற்றவர்களின் ஆத்தும தாகத்தை தீர்க்கிறவராகவும் உங்களை மாற்றுவார் (ஏசா. 58:9, 11). உயிர்த்தெழுந்து இன்றும் ஜீவிக்கிற இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் உங்களை வாழ்த்துகிறேன். தேவனுக்கே மகிமை உண்டாவதாக: ஆமென்.

**கர்த்தரின் பணியில்**
**சகோ. ஜஸ்டின் சுந்தரராஜ்**

நமது சபையின் மூலமாகத் தாங்கப்படும் திக்கற்ற பிள்ளைகள் ஊழியங்களை அறிய, தங்களுடைய நன்கொடைகளினால் தாங்க விரும்புவோர் தொடர்பு கொள்ளவேண்டிய பொறுப்பாளர்.
சகோ. ரவிஜாண் பீட்டர் – போன்: 50659288




# முடிந்தது

முடிந்தது என்று சொல்லி ஊழியத்தை நிறைவுற்ற
மாமன்னர் இயேசுவை போல பூரணமாய் வாழ்ந்திடுவோம்
மருகியே வாழ்வினில் மனம் கலங்கி நின்றுவிடாமல்
முழுமையாய் கடமைகளை வெற்றியுடன் முடித்திடுவோம்

சார்ந்திருக்கும் திருச்சபையிலும் பெற்றிருக்கும் குடும்பத்திலும்
செய்கின்ற பணிகளிலும் வசிக்கின்ற சமுதாயத்திலும்
சோராது பொறுப்புகளை திறம்பட செய்ய வேண்டும்
சிலுவை நாதர் வழிநடந்து முடிந்தது என முழங்கவேண்டும்

ஆத்தும வருத்தத்தின் பலன்கண்டு திருப்தியான
ஆண்டவர் இயேசுவை போல் தியாகியாய் வாழ வேண்டும்
அனைத்து செயல்களையும் காலத்தே நிறைவேற்றி
அகமகிழ பிறருக்கு விட்டுக்கொடுக்க கற்கவேண்டும்

எதையும் எதிர்பார்க்காமல் மற்றவருக்காய் வாழவேண்டும்
எப்பாடு பட்டாகிலும் எடுத்த காரியங்கள் முடிக்கவேண்டும்
எத்தனை இழப்புகள் சந்திக்க நேர்ந்தாலும்
இயேசுவை போல் வாழ்ந்திடுவோம் மனநிறைவு பெற்றிடுவோம்.

**- ஸ்டாலின்**

நீ சத்தமிட்டுச் கெம்பீரி: இஸ்ரவேலின் பரிசுத்தர் உன் நடுவில் பெரியவராயிருக்கிறார். -ஏசா. 12:6



## ஏப்ரல் மாதக் கேள்விகளுக்கு பதில் எழுதியவர்கள்

Sis. ஜீனா சதீஷ்குமார்
Sis. லதா கிறிஸ்டோபர்
Sis. பிரியா பிரேம்குமார்
Sis. ஹேனா எசேக்கியேல்
Sis. செலின் டேவிட்
Sis. சாந்தி
Sis. ஹெப்சி சாம்
Sis. ரீனா
Sis. ஜெபா
Sis. சுபா ஸ்டீபன்
Sis. பிரீடா சிங்
Bro. ஜாண்
Bro. லாசர்
Bro. தர்மர்
Bro. அருள்மணி
Sis. மரகதம் ஸ்டீபன்
Sis. சுகந்தி தம்புக்குமார்
Sis. ஜோன் அசோக்
Sis. மெர்ஷெலின் ஏசுரெத்தினம்
Sis. கீதா ஜெயக்குமார்
Sis. பத்மினி வர்க்கீஸ்
Sis. ஹெப்சிபா ஸ்டீபன்
Sis. மெர்லின் ஜோன்ஸ்
Sis. ஜரின் சில்வியா ஆல்பர்ட்
Sis. டாஃப்னி ஜெபசிங்
Sis. அனிதா தாஸ்
Bro. ஜாண்சன்
Bro. லூர்து சாமி
Bro. ஆல்பர்ட்
Bro. எட்வின் சாம்

# சிலைகள் தெய்வமானதோ!

சிலைகளை வணங்கும் பழக்கம் முதலில்... லாபான் யாக்கோபிடம், “இப்பொழுது உன் தகப்பனுடைய வீட்டின் மேலுள்ள வாஞ்சையினால் புறப்பட்டுப் போகிறதானால் போகலாம். என் தெய்வங்களை ஏன் திருடிக் கொண்டுபோகிறாய் என்று கேட்டான்” (ஆதி. 31:30). ஏனெனில் ராகேல் அவைகளை திருடிக் கொண்டு வந்திருந்தாள். இங்கேதான் சிலை அல்லது சொரூபத்தைக் குறித்து சொல்லப்பட்டுள்ளது.

இனி இந்தப் பழக்கம் எங்கே ஆரம்பித்தது என்று பார்க்கும்போது... சிலைகளை லாபான் வணங்கி வந்தான். இந்த லாபான் ரெபெக்காளின் சகோதரன். இவர்களுக்குத் தகப்பன் பெத்துவேல் (ரெபெக்காள்: ஈசாக்கின் மனைவி, யாக்கோபின் தாய்) இந்த காரியங்கள் நடந்த பின்பு, ஒருவன் ஆபிரகாமிடம் வந்து: மில்க்காளும் உன் சகோதரனாகிய நாகோருக்குப் பிள்ளைகளைப் பெற்றாள். அவர்கள்: ஊத்ஸ், பூஸ், கேமுவேல், கேசேத், ஆசோ, பில்தாஸ், இத்லாப், பெத்துவேல் என்பவர்கள். பெத்துவேல் ரெபெக்காளைப் பெற்றான் (ஆதி. 22:20–23) என்று அறிவித்தான். ஆபிரகாமின் சகோதரனாகிய நாகோரின் குடும்பம் “ஊர் (ur)” என்கிற கல்தேயரின் தேசத்துப்பட்டணத்திலே குடியிருந்தது (ஆதி. 11:31). இது மெசொப்பொத்தோமியா யூப்ரிடிஸ் (Euphrates – ஐப்பிராத்து) மற்றும் டிக்ரிஸ் (Tigris) இதெக்கெல் (ஆதி. 2:15) என்ற நதிகளுக்கு இடைப்பட்ட பகுதியாகும். இது தற்போதைய ஈராக் பகுதியாகும். எனவே மெசொப்பொத்தோமியாவில் தான் இந்த பழக்கம் ஆரம்பமானது.

சிநெயார் தேசத்திலுள்ள பாபேல், ஏரேக், அக்காத், கல்னே இடங்களை நிம்ரோத் என்பவன் அரசாண்டான் (ஆதி. 10:9–10). நிம்ரோத் என்பவன் காம் என்பவனுக்கு பேரன். காம் என்பவன் நோவாவின் மகன். இந்த பாபேல் என்னும் இடத்தில்தான் ஜனங்கள் ஒரு கோபுரத்தைக் கட்ட ஆரம்பித்தார்கள். இதுவும் மெசொப்பொத்தோமியா பகுதியைச் சேர்ந்ததாகும். தொல்பொருள் ஆராய்ச்சியில் “ஊர்” என்ற பகுதியில் இருந்த சிக்குராத் (Ziggurat) கோவில்களில் சின் அல்லது நன்னார் என்றழைக்கப்படும் தெய்வங்கள் வணங்கப்பட்டதாக நிரூபிக்கப்பட்டுள்ளது. ஒரு கோவில் சுவரில் நிலா மற்றும் சிலை வழிபாட்டை செதுக்கியிருப்பதைக் காணலாம். கி.மு. 3000 – 2500 என்று கணிக்கப்பட்டுள்ளது. ஆகவே நிம்ரோத் ஆட்சியில் இந்த சிலைவழிபாடு ஆரம்பமானது என்பது விளங்குகிறது.

**கர்த்தரின் அன்பில்**
Sis. **பத்மினி வர்க்கீஸ்**

---

## சபையின் 2014-ம் ஆண்டின் வாக்குத்தத்தம்

**“சத்தியம் உங்களை விடுதலையாக்கும்”**

யோவான். **8:32**

# வாள் (வசனம்) வீச்சு

## வார்த்தையின் பெலன்

நான் உனக்குக் கட்டளையிடவில்லையா? பலங்கொண்டு திடமனதாயிரு: திகையாதே, கலங்காதே, நீ போகும் இடமெல்லாம் உன் தேவனாகிய கர்த்தர் உன்னோடே இருக்கிறார் என்றார் (யோசு. 1:9).

ஆகையால் சேனைகளின் தேவனாகிய கர்த்தர் சொல்லுகிறது என்னவென்றால்: நீங்கள் இந்த வார்த்தையைச் சொன்ன படியினால், இதோ, நான் உன் வாயிலிட்ட என் வார்த்தைகளை அக்கினியும், இந்த ஜனத்தை விறகும் ஆக்குவேன், அது இவர்களைப் பட்சிக்கும் (எரே. 5:14).

நான் அவர்களைக் கர்த்தருக்குள் பலப்படுத்துவேன்: அவர்கள் அவருடைய நாமத்திலே நடந்துகொள்ளுவார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார் (சக. 10:12).

பேசுகிறவர்கள் நீங்கள் அல்ல, உங்கள் பிதாவின் ஆவியானவரே உங்களிலிருந்து பேசுகிறவர் (மத். 10:20).

பரிசுத்தஆவி உங்களிடத்தில் வரும்போது நீங்கள் பெலனடைந்து எருசலேமிலும், யூதேயா முழுவதிலும், சமாரியாவிலும், பூமியின் கடைசிபரியந்தமும், எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள் என்றார் (அப். 1:8).

பேதுருவும் யோவானும் பேசுகிற தைரியத்தை அவர்கள் கண்டு அவர்கள் படிப்பறியாதவர்களென்றும் பேதைமையுள்ளவர்களென்றும் அறிந்தபடியினால் ஆச்சரியப்பட்டு, அவர்கள் இயேசுவுடனே கூட இருந்தவர்களென்று அறிந்து கொண்டார்கள் (அப். 4:13)

சிலுவையைப் பற்றிய உபதேசம் கெட்டுப் போகிறவர்களுக்குப் பைத்தியமாயிருக்கிறது, இரட்சிக்கப்படுகிற நமக்கோ அது தேவபெலனாயிருக்கிறது (1கொரி. 1:18)

உங்கள் விசுவாசம் மனுஷருடைய ஞானத்திலல்ல, தேவனுடைய பெலத்தில் நிற்கும்படிக்கு, என் பேச்சும் என் பிரசங்கமும் மனுஷ ஞானத்திற்குரிய நயவசனமுள்ளதாயிராமல், ஆவியினாலும் பெலத்தினாலும் உறுதிப்பட்டதாயிருந்தது (1கொரி. 2:4–5).

**- அஹமதி தமிழ் திருச்சபை**

---

## CHILDREN THOSE WHO WROTE ANSWERS

Geona Shamy
Geophy
Jessly
Helen Prarthana
Sharon Keerthana
Joseph Prince
Sharon Grace
Hepzibha
Jainy
Lydia
Sherwyn

தங்களைச் சிறையாக்கினவர்களைச் சிறையாக்கி; தங்களை ஒடுக்கினவர்களை ஆளுவார்கள். ஏசா. 14:2

# பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷம்

**"நீங்கள் இந்தப் பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷந்தரியாமல், தேவனுடைய நன்மையும் பிரியமும் பரிபூரணமுமானசித்தம் இன்னதென்று பகுத்தறியத்தக்கதாக, உங்கள் மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாகுங்கள்"** (ரோம. 2:2). ஒரு குடியானவன் தான் வளர்க்கும் புறாக்களுக்கெல்லாம் நல்ல ஆகாரத்தை போடுகிறான் என்று ஒரு காகம் கவனித்து, தான் புறா வேஷம் போட்டுக் கொண்டால் கஷ்டப்பட்டு உணவை தேடி அலைய வேண்டுவதில்லை என எண்ணியது. ஆகவே ஒரு சுண்ணாம்பு குழியிலே போய் புரண்டு புரண்டு படுத்து தன்னை வெண்மையாக்கிக் கொண்டது. புறாவைப் போல புதிய நடையும் கற்றுக் கொண்டது. அடுத்த நாள் குடியானவன் புறாக்களுக்கு ஆகாரம் கொடுக்கும் போது தானும் ஒரு புறாவைப் போல நின்று அருமையான உணவை உட்கொண்டது. இப்படி அநேக நாள் இந்த திருட்டு காகம் அவரை ஏமாற்றிக் கொண்டே வந்தது.

ஒருநாள் அந்த பக்கத்தில் எலி செத்துக் கிடக்கும் நாற்றம் அடித்தது. மற்ற காகங்களெல்லாம் கூடிவந்து கா.. கா.. என்று கத்திக் கொண்டு செத்த எலியை விருந்துண்ண ஆரம்பித்தன. புறா வேஷம் போட்ட காகத்திற்கு தன்னையும் அறியாமல் ஜென்ம சுபாவம் தலையெடுத்து புறாக்களின் மத்தியிலிருந்து கா.. கா.. என்று கத்திக் கொண்டு செத்த எலியை நோக்கி பறந்தது. அதை பார்த்த குடியானவனுக்கு கோபம் வந்தது. இனிமேல் வேஷம் போட்ட காகம் வரட்டும் என்று எண்ணிக் கொண்டான். காகத்தின் வேஷத்தைக் கண்ட மற்ற காகங்கள் அதை விரட்டியடித்தன. உயிர் பிழைத்தால் போதும் என எண்ணி குடியானவனிடம் வந்தது. குடியானவனும் கோலால் அடித்து துரத்தினான். இங்கும் இல்லாமல் அங்கும் இல்லாமல் காகம் தவித்தது.

இந்நாட்களில் அநேக கிறிஸ்தவர்கள் நேரத்திற்கும் இடத்திற்கும் தகுந்தாற்போல் வேஷம் போடுகின்றனர். விசுவாசிகளிடமும் போதகரிடமும் பரிசுத்த வேஷம். கொஞ்சம் நகர்ந்து உலகத்திற்குள் வந்தவுடன் பேச்சு, செயல் எல்லாமே மாறிவிடுகிறது. நம் தேவன் நம்முடைய வெளிவேஷத்தைக் கண்டு ஏமாறுபவர் அல்ல. அவர் நம் உள்ளிந்திரியங்களை ஆராய்ந்து அறிபவர். ஆகவே நாம் உலகத்திற்கு அடிமையாகாமல், தேவனுக்கு அடிமையானவர்களாய் மாறவேண்டும். நம் மனமும் புதிதாக மாற்றப்பட வேண்டும். ஆகவே ஒவ்வொரு நாளும் நாம் காலையில் எழுந்தவுடன் நம் மனதையும், சிந்தனையையும், எண்ணங்களையும் கர்த்தர் ஆளும்படி அவர் கரத்தில் கொடுத்துவிட வேண்டும். அப்பொழுது கர்த்தரால் நாம் புதிதாக்கப்படுகிறபடியால் பாவத்திற்கு விலகி, கர்த்தருக்குள் நாம் எப்பொழுதும் மறுரூபமாக வாழ முடியும். அதற்கு கர்த்தர் தாமே நமக்கு கிருபை செய்வாராக. ஆமென்: அல்லேலூயா!

**கர்த்தரின் அன்பில்**

Sis. **ஹேனா எசேக்கியல்**

## போ அல்லது அனுப்பு

நமது சபையின் மூலமாகத் தாங்கப்படும் இந்திய தேச ஊழியங்களை அறிய, தங்களுடைய நன்கொடைகளினால் தாங்க விரும்புவோர் தொடர்பு கொள்ளவேண்டிய பொறுப்பாளர்.

சகோ. சிவகுமார் - போன்: 97224276

அவனவனுடைய ஆத்துமா அவனவனில் கிலேசப்படுகிறது. -எசா. 15:4

# இந்த மாதம் பிறந்த நாளை சிறப்பிக்கிறவர்கள்

- செல்வி. ஹெலன் கிறிஸ்டோபர்
- செல்வி. ஏஞ்சலின் ஜெகநாதன்
- செல்வி. அன்னாள் ஆசீர்வாதம்
- செல்வி. சித்ரா ராஜன்
- செல்வி. பியூலா ஜெயக்குமார்
- செல்வி. சுஸ்மிதா செல்வதாஸ்
- செல்வி. ரீமாறோஸ் எபெநேசர்
- செல்வி. எவாஞ்சலின் சாமுவேல்
- செல்வி. மீனா குமாரி சுகுமார்
- செல்வி. தெபோரா ஆமோஸ்
- செல்வன். பிரவீன்குமார் சாமுவேல்
- செல்வன். ஜோ நிர்மல் டென்சிங்
- செல்வன். மில்டன் பக்தராஜ்
- செல்வன். கதிரவன் சுகுமார்
- சகோதரி. சித்ரா மேரி சாம்சன்
- சகோதரி. மரிய குளோரி தாஸ்
- சகோதரி. ஆனந்தி சாலொமோன்
- சகோதரி. சஜின் ஜீவா
- சகோதரி. எலிசபெத் ஸ்டாலின்
- சகோதரி. ஜெயா கொம்மையன்
- சகோதரி. அகிலா ராஜா செல்வன்
- சகோதரி. ஜெகதாம்பாள் ராஜவேல்
- சகோதரி. குமுதினி வில்சன்
- சகோதரி. சுகந்தி தம்புகுமார்
- சகோதரி. சவரியம்மா அந்தோனிசாமி
- சகோதரி.குளோரி ஆல்ப்ஸ்ஜேம்ஸ்
- சகோ. ஜெபசிங்
- சகோ. ஸ்டீபன். T
- சகோ. ஜோண்ஸ் செல்வசிங்
- சகோ. ஜஸ்டின் சுந்தரராஜ்
- சகோ. எபெநேசர்
- சகோ. டோனி ராமமூர்த்தி
- சகோ. கலியமூர்த்தி
- சகோ. தர்மர்
- சகோ. கொம்மையன்
- சகோ. ராஜவேல்
- சகோ. சாமுவேல் ஐசக்
- சகோ. ஆசீர்வாதம்

# இந்த மாதம் திருமண நாளை சிறப்பிக்கிறவர்கள்

- திருமதி & திரு. எபெநேசர்
- திருமதி & திரு. ஸ்டாலின்
- திருமதி & திரு. வில்சன். M
- திருமதி & திரு. எட்வின் சாம்
- திருமதி & திரு. கிரன் குமார்
- திருமதி & திரு. அந்தோனிசாமி
- திருமதி & திரு. ஆல்பர்ட் சிங்
- திருமதி & திரு. தர்மசகாயம்
- திருமதி & திரு. தாமஸ்
- திருமதி & திரு.ஆல்ப்ஸ்ஜேம்ஸ்
- திருமதி & திரு. கொம்மையன்
- திருமதி & திரு. ஜாண் மில்லர்
- திருமதி & திரு. ஈஸ்டர் ராஜ்
- திருமதி & திரு. ஆல்பர்ட். S
- திருமதி & திரு.ஜாண்போஸ்கோ
- திருமதி & திரு. பிரேம்குமார்
- திருமதி & திரு. பால் பாண்டியராஜ்
- திருமதி & திரு. ஜெயசேகர்
- திருமதி & திரு. மனோகரன் .P

ஒடுக்குகிறவன் இல்லாதேபோவான்: சங்கரிப்பு ஒழிந்துபோம்: மிதிக்கிறவர்கள் தேசத்தில் இராதபடிக்கு அழிந்துபோவார்கள். –ஏசா. 16:4

# மே 2014 ஆலய ஆராதனைகள்

ஞாயிறு ஆராதனை மாலை 5:00 முதல் 6:15 வரை

| நாள் | நடத்துபவர் | செய்தி |
|---|---|---|
| 04-05-2014 | சகோ. ஸ்டாலின் | சகோ. இயேசுநாயகம் |
| 11-05-2014 | சகோ. கிறிஸ்டோபர் | சகோ. ஜெயசேகர் |
| 18-05-2014 | சகோ. விசு | சகோ.ஜஸ்டின்சுந்தரராஜ் |
| 25-05-2014 | சகோ. அற்புதராஜ் | சகோ. ரவிஜாண் பீற்றர் |

வெள்ளி ஆராதனை மாலை 4:40 முதல் 6:20 வரை

| நாள் | நடத்துபவர் | செய்தி |
|---|---|---|
| 02-05-2014 | சகோ.ஜஸ்டின்சுந்தரராஜ் | சகோ. கிறிஸ்டோபர் |
| 09-05-2014 | தாய்மார்கள் ஆராதனை | |
| 16-05-2014 | உபவாச திருவிருந்து ஆராதனை | |
| 23-05-2014 | சகோ. ஜெயசேகர் | சகோ. பிரேம்குமார் |
| 30-05-2014 | குடும்ப ஆராதனை | |

சங்கிலி தொடர் ஜெபம்: 01-05-2014 மாலை 6 மணி முதல் காலை 6 வரை

பொதுமன்றக் கூடுகை: 2.5.2014. மாலை 7.15 மணி, சபை வீடு

முழு இரவு ஜெபம்: 08-05-2014 இரவு 10 மணி முதல் காலை 2 மணி வரை

---

வாலிபர் கூடுகை: 23.5.2014, சகோ. பிரேம்குமார் இல்லம், மங்காஃப்

பெண்கள் கூடுகை: பின்னர் அறிவிக்கப்படும்.

அவன் கண்கள் இஸ்ரவேலின் பரிசுத்தரையே நோக்கிக்கொண்டிருக்கும். –ஏசா. 17:8

மறக்கமுடியுமா!

# மாமம(பு)னிதர் ஜாண் ஹண்ட்
## (1812 – 1848)

19–ம் நூற்றாண்டில் இங்கிலாந்திலுள்ள லின்கோலன்சிர் என்ற சிற்றூரில் வாழ்ந்த ஜாண் ஹண்ட் தனது பத்தாவது வயதிலேயே பள்ளிப் படிப்பை விட்டு விவசாயியாக வேலை செய்யத் துவங்கினார். தனது 17–வது வயதில் கதிர்களை அறுத்துக் கொண்டு நிலத்திலிருந்து வரும்போது அவனது நண்பர்கள் மெலிந்த சத்து அற்ற அவனது கதிர்களைப் பார்த்து கேலி செய்யத் தொடங்கினர். உனக்கு விவசாயமே வராது. தையல் கலையைக் கற்றுக் கொண்டு தொழில் செய் என்று கேலி செய்தான் அதில் ஒருவன். மற்றவன் உன் தந்தையைப்போல் ஒரு போர் வீரனாகவோ கப்பலில் பணிபுரிபவனாகவோ மாறிவிடு என்றான். நல்ல உயரமான திடகார்த்தமான உடலைப் பெற்ற ஜாண் ஹண்ட் தனது நண்பர்களின் சொற்களில் உண்மை உள்ளது என்று உணர்ந்து மெல்ல சிரித்துக் கொண்டே ஒருவேளை நான் ஆப்பிரிக்கா தேசத்திற்குப் போர் வீரனாகச் சென்று என் தேசத்திற்குச் சேவை செய்வேன் என்றார். எந்த ஆபத்திற்கும் பயப்படாத அஞ்சா நெஞ்சம் படைத்த ஜாண் ஹண்ட் ராணுவத்தில் சேர நினைத்தார். அப்போது நண்பனது வீட்டில் நடக்கும் ஜெபக்கூட்டத்திற்குச் சென்றார் ஜாண்.

இதுவரை ஜாண் வாழ்வில் கிறிஸ்தவம், ஆவிக்குரிய வாழ்வு போன்ற ஆண்டவருக்கடுத்த காரியங்களுக்கு இடமே இல்லாதிருந்தது. பழைய நண்பர்களின் சகவாசத்தால் அதிகம் சோர்ந்தும் இருந்தார். இந்த ஜெபக்கூடுகைகளின் பாடல்கள் செய்திகள் ஜெபங்கள் இவரது வாழ்வை மாற்ற ஆரம்பித்தது. கிறிஸ்துவைத் தனது சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டார். ஆண்டவரது அன்பை உணர்ந்த ஜாண் ஆப்பிரிக்கா தேசத்திற்கு போகவேண்டுமென்ற அவரது தீர்மானம் போர்வீரனாக அல்ல ஒரு மிஷனெரியாக அங்கு செல்வேன் என்ற வாஞ்சை வலுப்பெற்றது. தனக்கு முன்னிருக்கும் உன்னத பணியைச் செய்ய தன்னை ஆயத்தப்படுத்திக் கொள்ள வேண்டும் என்ற எண்ணம் ஜாணை கடினமாய் உழைப்பதற்கும் கஷ்டங்களைச் சகித்துக் கொள்ளவும் மேல் படிப்பில் தன்னை ஈடுபடுத்திக் கொள்ளவும் செய்தது. அவரது எளிய வாழ்வு தெளிவான செய்திகள் பலரை ஆண்டவருக்குள் வழிநடத்தியது. தனது நெருங்கிய ஆவிக்குரிய நண்பர்களிடம் தனது இலட்சியமான ஆப்பிரிக்கா தேசத்திற்கு மிஷனெரி யாகப் போகவிரும்புவதைச் சொன்னார். ஆனால் தான் எப்படிப் போக முடியும்! படிப்பு அறவே தனக்கு இல்லை என்பதை வருத்தத்துடன் தெரிவித்தார். அவரது நண்பர்கள் அதை சரிசெய்து விடலாம் என்று அவரை தைரியப்படுத்தி பல முயற்சிகள் செய்து ஹஸ்டனில் உள்ள மெதடிஸ்ட் வேதாகமக் கல்லூரியில் இரண்டு வருட படிப்பைப் படிக்க உதவி செய்தனர்.

படிப்பை முடித்தவுடன் அவரது மிஷனெரி இயக்கத் தலைவர் ஜாண் நீ உலகத்திலே மோசமான காட்டு மிராண்டி மக்கள் வாழும் பிஜீ தீவுகளுக்கு மிஷனெரிப் பணி செய்ய போகவேண்டும். அதற்கு நீ ஆயத்தமா? என்று கேட்டார். என் ஆண்டவர் அனுப்பும் எந்த இடத்திற்கும் நான் போக ஆயத்தம். எந்தத் தடையும் இல்லை என்று ஜாண் பதிலளித்தார். தனது வாழ்வில் மிஷனெரிப் பணிக்கான இடம் பிஜீ தீவுகளே, ஆப்பிரிக்கா இல்லை என்பதை உணர்ந்து கொண்டார். பசிபிக் மகா சமுத்திரத்தில் ஆஸ்திரேலியாக் கண்டத்தின் கிழக்குப் பகுதியிலுள்ள பிஜீ தீவு கூட்டங்கள் சிறு சிறு

சேனைகளின் கர்த்தருக்குக் காணிக்கையாகக் கொண்டுவரப்படும். -ஏசா. 18:7

தீவுகளாகக் காட்சியளித்ததோடு மிகவும் பின்தங்கிய நிலையிலும் இருந்தன. ஒவ்வொரு தீவையும் ஒரு குறுநில மன்னன் ஆண்டதால் மற்ற தீவு மன்னர்களுடன் அடிக்கடி போர் நிகழ்ந்தது. மக்களைக் கொன்று குவிப்பதுடன் மனித மாமிசத்தை உண்ணும் பழக்கமுமிருந்தது. பல மூடப்பழக்க வழக்கங்களைப் பின் பற்றிய இவர்கள் இறந்த ஆவிகளுக்குப் பயந்தனர். கணவன் இறந்தவுடன் மனைவியையும் கொன்று அவனுடன் புதைத்து விடுவார்கள். அப்படி மனைவியைக் கொல்லா விட்டால் கணவனின் ஆவி பூமியில் அலையும் என்பது இவர்களது மூட நம்பிக்கை. வியாதியஸ்தர்களையும் வயதானவர்களையும் பயனற்றவர்கள் எனக் கழுத்தை நெரித்தோ மண்ணில் உயிருடன் புதைத்தோ கொன்று விடுவார்கள். இப்படிப்பட்ட மக்கள் மத்தியில் மிஷனெரியாகச் செல்ல ஆயத்தமான ஜாண் ஹண்ட் அவருக்கு நியமிக்கப்பட்ட மணப் பெண்ணான ஹேனாவிடம் ஃபிஜீ தீவுகளைப் பற்றி பகிர்ந்து கொண்டு நாம் அங்கு மிஷனெரியாகச் செல்ல வேண்டும் என்று அழைத்தபோது அவளும் தடையேதும் சொல்லாமல் சம்மதித்தாள்.

1838–ம் ஆண்டு மே மாதம் 8–ம் தேதி இங்கிலாந்து தேசத்தை விட்டு ஆறு மிஷனெரிகளுடன் ஆஸ்திரேலியாவிலுள்ள சிட்னியை நோக்கி கப்பற் பயணம் மேற்கொண்டனர் ஜாண்–ஹேனா தம்பதியினர். கஷ்டமான பயணத்தால் ஹேனா அதிக சுகவீனம் அடைந்தார் என்றாலும் தேவ கிருபையால் சுகம் பெற்று சிட்னி வந்தடைந்தனர். சிட்னியிலிருந்து ஒரு சிறிய மரக்கப்பலில் பிஜீ தீவிற்குப் புறப்பட்டனர். ஆனால் லாகம்பா என்ற தீவை ஜாண் தம்பதியினர் அடைந்தபோது ஜாணின் மிஷனெரி இயக்கத்தின் தலைவர் திரு. கார்கில் ஜாணைச் சந்தித்து ரீவா என்ற தீவிலுள்ள மிஷனெரி திரு. கிராஸ் அதிக சுகவீனமாக இருக்கிறார். அவரை ஆஸ்திரேலியாவுக்கு உடனே கொண்டுபோய் மருத்துவ உதவி செய்ய வேண்டும் அதற்கு இருவர் அங்கு சென்று உதவ வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். ரீவாவிற்கு கப்பல் ஏறியது ஜாணின் குடும்பம். கப்பல் கேப்டன் தொலை நோக்கியில் கரையைப் பார்த்த போது மக்கள் ஆயுதங்களுடன் எதிர்ப்பு தெரிவிப்பது தெரிந்தது. கரை சேர நூறு மைலுக்கு அப்பாலே கப்பலை நிறுத்தி இவர்களை ஒரு சிறு படகில் ஏற்றி அனுப்பினார் கேப்டன். ஜெபித்துக் கொண்டே சென்ற இவர்களை ஆண்டவர் பாதுகாத்து திரு. கிராஸ் வீட்டை சுகமாக வந்தடையச் செய்தார். அதிக சுகவீனமாய் இருந்த கிராஸோ ஆஸ்திரேலியா வர மறுத்துவிட்டார். இந்தக் கொடூரமான மக்களை ஆண்டவரிடம் வழி நடத்தும் பெரிய பணி எனக்கு முன் உள்ளது. எனவே நீங்களும் குடும்பமாக எங்களுடன் இருந்து பணி புரியுங்களேன் என்று கேட்டுக் கொண்டார். ஜாணும் அதற்கு இசைந்து அவருடன் தங்கிப் பணிசெய்ய ஆரம்பித்தார். திரு. கிராஸின் உடல் நிலையும் முன்னேற ஆரம்பித்தது. ரீவாவில் இரு குடும்பமும் இணைந்து பணிபுரிய ஆரம்பித்தனர். முதலாவதாக அவர்களது பாஷையைக் கற்றுக் கொள்ள ஆரம்பித்தனர். ஆறு வாரத்தில் ஜாண் ஹண்ட் அந்த மொழியில் புலமை பெற்று வேத கதைகளை பிஜீயின் மொழியில் எழுதி கூடிவந்த மக்களுக்குப் போதித்தார்.

ஆர்வத்துடன் கேட்ட மக்கள் வெள்ளை மனிதன் நமது மொழியிலே நமக்குப் புரியும்படி எளிதாக உண்மையான ஆண்டவரைச் சொல்கிறார் எனக்கூறி

ஆர்வம் காட்டினர். இதனால் விசுவாசிகளின் எண்ணிக்கை நாற்பதிலிருந்து நூறாக அதிகரித்தது. எதிர்ப்பும் பெருகினது. முதலாவது அங்கிருந்த குறுநில மன்னர்கள் மூலம் எதிர்ப்புகள் வந்தன. மக்கள் மிஷனெரிகளின் பின்னால் செல்வதைப் பார்த்து தங்களது அதிகாரம் குறைந்துவிடும் என்று பயந்தனர். ஒருமுறை திறந்த வெளியில் கூட்டங்கள் நடத்திக் கொண்டிருந்தபோது மன்னனின் சகோதரன் கற்களை வீசி எல்லா மக்களையும் காயப்படுத்தினான். ஜாண் மீது ஒரு பெரிய கல் விழுந்து கையில் பலத்த காயம் ஏற்பட்டது. ஆனாலும் சோர்ந்து போகாமல் தொடர்ந்து கூட்டத்தை நடத்தினார். இதனைக் கண்ட எதிர்ப்பாளர்கள் வெட்கப்பட்டுத் திரும்பி விட்டனர். தோல்வி கண்ட எதிர்ப்பாளர்கள் மிஷன் வீட்டைக் கொள்ளையடித்தது மட்டுமல்லாமல் புதிய விசுவாசி களின் வீடுகளையும் சூறையாடி அடித்துத் தரைமட்டமாக்கினார்கள். உபத்திரவத்தின் மத்தியிலும் ஒரு விசுவாசிகூட பின்வாங்காமல் விசுவாசத்தில் நிலைத்து இருந்தனர். ஜாணின் குடும்பத்திற்கு மரணமும் ஆபத்துக்களும் அதிக தூரம் இல்லை. ஆனால் ஜாணின் நல்ல திடகார்த்தமான உடல் அமைப்பு எந்த மனிதனையும் அவருடன் சண்டையிடத் தயங்க வைக்கும். எதற்கும் அஞ்சாமல் தைரியமாக நிற்கும அவரது மனவலிமையால் காட்டு மிராண்டிகள் கூட அவரை எதிர்க்க முடியவில்லை. தேவனது பாதுகாப்பு அவருக்கு எப்போதும் இருப்பதை உணர்ந்தார். ரீவாவில் ஜாணின் ஆறுமாத ஊழியத்தால் அப்பகுதி மன்னனும் சுவிசேஷத்தை வாஞ்சையுடன் கேட்க ஆரம்பித்தான்.

பிஜீ தீவின் வட பகுதியிலுள்ள சோமோ சோமோவுக்கு ஜாண் தம்பதியினர் அனுப்பப்பட்டனர். இவர்களுடன் ஒரு மருத்துவ மிஷனெரி லைத் என்பவரும் சென்றார். சோமோ சோமோவின் மன்னன் எழுபது வயது நிரம்பிய முதியவர். இவர் மிஷனெரிகளை அன்புடன் வரவேற்றார். உண்மையான அதிகாரம் இவரது மகன் டுக்கிலாகிலாவிடம் இருந்தது. இவன் துஷ்ட மிருகத்தைப் போன்ற குணமுடையவன். தந்தையும் மகனும் மிஷனெரிகளை வரவேற்றதற்கான காரணம் மிஷனெரிகளிடம் இருந்த பொருட்கள் துணிமணிகள் இரும்பு சாமான்களை எப்படியாவது பெற்றுக் கொள்ள வேண்டும் என்பதற்காகத்தான். தொடர்ந்து மொழியைக் கற்றுக்கொண்டு வேதத்தை பிஜீன் மொழியில் மொழி பெயர்க்க ஜாண் ஆரம்பித்தார். இதற்காக அச்சு இயந்திரத்தை இங்கிலாந்திலிருந்து வரவழைத்து விவா என்ற இடத்தில் அச்சகத்தை அவர் நிறு வினார். ஹேனா ஜாண் பெண்கள் மத்தியில் பணிபுரிய ஆரம்பித்தார். பெண்களுக்கென்று மதிப்போ உரிமைகளோ இல்லாத சமுதாயத்தில் அவர்களுக்கும் ஜீவனுள்ள தேவன் தேவை என்பதை நன்கு உணர்ந்து பணிசெய்து ஆண்டவருக்குள் அவர்களை வழி நடத்தினார். பெண்களில் பலர் ஆண்டவரை ஏற்றுக் கொண்டும் மன்னனுக்கும் கணவனுக்கும் தகப்பனுக்கும் பயந்ததால் வெளியே அறிக்கையிடவில்லை. கொடூரமான டுக்கிலாகிலா ஒருமுறை அதிக சுகவீனப்பட்டான். டாக்டர் லைத் மற்றும் ஜாண் குடும்பத்தாரின் கவனிப்பால் மரணத்தினின்று அவன் பிழைத்து சுகம் பெற்றான். மிஷனெரிகளால் சுகம் பெற்றதால் புதிய விசுவாசிகளைத் துன்புறுத்துவதை அவன் நிறுத்திக்கொண்டான். எனவே விசுவாசிகளின் எண்ணிக்கை பெருகியது. இறுதியில் டுக்கிலாகிலா குஷ்டரோகத்தால் பீடிக்கப்பட்டுத் தனியாக ஒரு குடிசையில் வாழ்ந்தபோது

டாக்டர் லைத்–ன் மருத்துவ உதவி மற்றும் ஜாணின் கிறிஸ்தவ போதனையால் ஆண்டவரை முழுவதும் ஏற்றுக் கொண்டு ஞானஸ்நானம் பெற்று ஒரு கிறிஸ்தவனாக மரித்தான். விவாவில் மட்டுமல்லாமல் பிஜீ–ன் எல்லாத் தீவுகளுக்கும் சென்று ஜாண் ஊழியம் செய்தார். அவருடைய உடல் பலவீனப்பட்டாலும் பிஜீ தீவை விட்டுச் செல்ல விரும்பவில்லை.

ஊழியத்தில் அவரை அதிகம் எதிர்த்த உள்ளூர் மனிதன் வரானி வேதத்தைக் கற்றுக் கொள்ள ஆர்வம் கொண்டு ஜாணிடம் வந்து வேதத்தையும் கிறிஸ்தவ விசுவாசத்தையும் கற்றுக் கொண்டான். அதுமட்டுமல்ல கிறிஸ்துவின் சிலுவை மரணத்தையும் இரட்சிப்பையும் ஜாண் அவனுக்கு போதித்தார். ஜாண் சொன்ன நற்செய்தியால் ஞானஸ்நானம் பெற்று கிறிஸ்தவனானான். ஜாணின் ஊழியத்தின் மகுடமாக வரானின் மனமாற்றம் அமைந்தது. பிஜீ தீவின் மக்கள் மூட பழக்கம் நரமாமிசம் உண்பதிலிருந்து விடுதலை பெற்று வந்தனர். ஜாணின் உடல் அதிக பலவீனப்பட ஆரம்பித்தது. 1848–ம் ஆண்டு அக்டோபர் 9–ம் தேதி தேவனிடம் சேர்ந்தார். 36 வயது நிரம்பிய ஜாண் ஹண்ட் ரிலாவின் பத்து வருட கடின உழைப்பிற்குப் பின் மரித்துப்போனார். இங்கிலாந்திலிருந்து அனுப்பப்பட்ட இரும்பு கம்பிகளால் சூழப்பட்ட அவரது எளிய கல்லறை இன்னும் அவரது அர்ப்பணிப்பு ஊழியத்தை உலகிற்குச் சொல்லுகிறது. இன்று 90 சதவீதத்தினர் பிஜீ தீவுகளில் கிறிஸ்தவர்கள் என்பது மிகவும் குறிப்பிடத்தக்கது.


**கர்த்தரின் அன்பில்**
**சகோ. சுகுமார்**

## QUIZ FOR CHILDREN

(Write the answers using the New King James Version. Children those who are studying above SECOND Standard can participate)

1. What must you do and depart from evil?
2. When will you be secure, without fear of evil?
3. Which is the principal thing?
4. Happy is the man who finds ______________
5. Who is bitter as wormwood?
6. What does the Lord give to the humble?
7. Whose way is like darkness?
8. Which will be health to your flesh, and strength to your bones?
9. Who will be your confidence and will keep your foot from being caught?
10. Name the two which will be graceful ornaments on your head?

**Note:- ANSWERS can be taken from Proverbs 1 to 6. Submit your answers to the Sunday School Teachers on or before 23.05.2014.**



# மல்லிகைப் பூ வாசம்

## குவைத் பாட்டி

மன அழுத்தம், உடல் சூடு போன்ற பிரச்சனைகளால் பாதிக்கப்பட்ட பெண்கள் ஒன்றுமே செய்ய வேண்டாம். உங்களுக்குப் பிடித்த அளவிற்கு மல்லிகை பூவை வாங்கி தலையில் சூடுங்கள் அது போதும். மல்லிகைப் பூவை அந்த காலத்திலேயே பல்வேறு பிரச்சனைகளுக்கு மருந்தாக பயன்படுத்தி வந்தனர். அதே போல பல்வேறு மருத்துவ குணம் கொண்ட **"மல்லிகை பூ எண்ணெய்யை"** மருந்தாக பயன்படுத்தியிருக்கிறார்கள்.

அதில் ஒரு சில அடிப்படை விஷயங்களை தெரிந்து கொள்ளலாம். வெளியில் உணவை வாங்கி சாப்பிடுகிறவர்களுக்கு வயிற்றில் பூச்சித் தொல்லை அதிகமாக இருக்கும். வயிற்றில் பூச்சி இருந்தால் உடல் மெலியும், சருமத்தில் வெள்ளைத் திட்டுக்கள் காணப்படும். அப்படியானவர்கள் 4 மல்லிகை பூவை தண்ணீரில் போட்டு கொதிக்க வைத்து அந்த நீரை அருந்தி வர வேண்டும். இவ்வாறு அருந்தி வர வயிற்றில் உள்ள கொக்கிப் புழு, நாடாப்புழு போன்றவை அழியும். இந்த அறிகுறிகள் இருப்பவர்கள் மட்டுமல்லாமல் பொதுவாக அடிக்கடி பூச்சி மருந்து சாப்பிடுபவர்கள் தவிர அனைவருமே இந்த மல்லிகை தண்ணீரை அருந்தலாம்.

இதேபோல மல்லிகை பூக்களை நிழலில் வைத்து உலர்த்தி அவை காகிதம் போல ஆனதும் அவற்றை பொடியாக அரைத்து பொடி செய்து வைத்துக் கொள்ளவும். இதனை தண்ணீர் கலந்து குடித்து வர சிறுநீரக கற்கள் தானாகவே கரைந்து போகும். எந்த உயர் சிகிச்சையும் தேவைப்படாது. நோய் எதிர்ப்பு சக்தி இல்லாதவர்கள் மல்லிகை பூக்கள் ஒன்றிரண்டை உண்டு வர நோய் எதிர்ப்பு சக்தி உயரும். இது மட்டுமல்லாமல் அவ்வப்போது ஏற்படும் சில உடல் நலப் பிரச்சனைகளுக்கும் மல்லிகை சிறந்த நிவாரணியாக உள்ளது. அதாவது, சிலருக்கு மல்லிகை வாசனை தலைவலியை ஏற்படுத்தும். ஆனால் தலைவலியை குணமாக்கும் குணம் மல்லிகைக்கு உள்ளது என்பது பலருக்கும் தெரியாது. தலைவலி ஏற்படும் போது சில மல்லிகை பூக்களை கையில் வைத்து கசக்கி அதனை தலையில் பத்திடுவது போல தேய்த்துவிட்டால் தலைவலி காணாமல் போகும்.

மல்லிகை பூவிலிருந்து ஒரு வகை எண்ணெய் எடுக்கப்படுகிறது. இந்த எண்ணெய் பல்வேறு உடல் உபாதைகளுக்கு அருமருந்தாக உள்ளது. எங்கேனும் அடிபட்டு அல்லது சுளுக்கு பிடித்து வீக்கம் காணப்பட்டாலும் நாள்பட்ட வீக்கமாக இருந்தாலும் மல்லிகை பூவை அரைத்து பூசிவந்தால் வீக்கம் குறையும். அத்தோடு மல்லிகை மொட்டுகளை சாப்பிட்டு வந்தால் சிறு நீரகம் சம்பந்தப்பட்ட கோளாறுகள், கண் நோய்கள், மஞ்சள் காமாலை மற்றும் சில பால்வினை நோய்களும் குணமாகும். மல்லிகை பூவை நீரில் கொதிக்க வைத்து அதனுடன் பனங்கற்கண்டு சேர்த்து குடித்து வந்தால் கண்ணில் வளரும் சதை வளர்ச்சி குறைந்து படிப்படியாக தெளிவான பார்வை பெறலாம்.

**– அஹமதி தமிழ் திருச்சபை**

---

## ஆரஞ்சுப்பழம்

# பழம் சாப்பிடுங்க

இப்பழத்தில் வைட்டமின் ஏ, வைட்டமின் சி, வைட்டமின் பி, சுண்ணாம்புச் சத்து அதிகம் உள்ளது. தூக்கமின்றி அவதிப்படுபவர்கள் படுக்கச் செல்லும் முன் அரை டம்ளர் ஆரஞ்சுப் பழச்சாறுடன் சிறிதளவு தேன் சேர்த்து சாப்பிட்டால் நன்றாக தூக்கம் வரும். பல் சதை வீக்கம், சொத்தை விழுந்து வலி ஏற்படுதல், பல் வலி, ஈறுகளில் ரத்தக்கசிவு உள்ளவர்கள் ஆரஞ்சுப் பழச்சாற்றை சிறிது நேரம் வாயில் வைத்து பின் விழுங்கிவர நல்லசுகமும் கிடைக்கும்.

தர்ஷீஸின் குமாரத்தியே; நதியைப்போல நீ உன் தேசத்தில் பாய்ந்துபோ; உனக்கு அணையில்லை. -ஏசா. 23:10

# ANSWER FOR THE QUIZ (April)

| | |
|---|---|
| 1. Saved | Mk. 16:16 |
| 2. love | Mk. 12:31 |
| 3. gospel, creature | Mk. 16:15 |
| 4. words | Mk. 13:31 |
| 5. Watch, spirit | Mk. 14:38 |
| 6. Nations | Mk. 11:17 |
| 7. Covenant | Mk. 14:24 |
| 8. Teaching | Mk. 11:18 |
| 9. Livelihood | Mk. 12:44 |
| 10. Head | Mk. 14:3 |

## ஏப்ரல் மாதக் கேள்விகளுக்கு பதில்கள்



| | |
|---|---|
| 1. தவறு | சங். 109:30 |
| 2. தவறு | சங். 107:38 |
| 3. சரி | சங். 115:17 |
| 4. சங். 111:10–ன் முதல் பகுதி | |
| 5. கீலேயாத், மனாசேயும், எப்பீராயீம், யூதா | சங். 108:8 |
| 6. சங். 33 | |
| 7. 15–அதிகாரங்கள் 120,121,122,123,124,125,126,127,128,129,130,131,132,133,134 | |
| 8. உழுகிறவர்கள் | சங். 129:3 |
| 9. சங். 118 | |
| 10. "கிருபை" என்ற வார்த்தை | சங். 136 |
| 11. 6 முறை வசனங்கள் 2,10,34,58,69,145 | |
| 12. வசனம் 5 முதல் 7 வரை | சங். 115 |
| 13. 6, (148, 146, 135, 113, 149, 150) | |
| 14. சிறுமையானவர்கள் மற்றும் எளியவர்கள். | சங். 140:12 |
| 15. 54 முறை | |

**இன்றைய தகவல்**

## தேன்

எத்தனை காலமானாலும் கெட்டுப் போகாத ஒரே பொருள் தேன். தேன் என்று நினைத்து சர்க்கரை பாகுவை வாங்குவோரும் உண்டு. இனியும் ஏமாறாமல் நாம் பயன்படுத்தும் தேன் உண்மையானதா என்று கண்டறிய இதோ இரண்டு ஆலோசனைகள்.

ஒன்று: ஒரு காகிதத்தில் ஒரு துளி தேனை வைத்தால் அது காகிதத்தில் உறிஞ்சப்படாமல், பரவாமல் அப்படியே நிற்கும்.

இரண்டு: ஒரு கிளாஸ் தண்ணீரில் ஒரு துளி தேனைவிட்டால் அது நீரோடு கரையாமல் நேராக தண்ணீரின் கீழே சென்று அமரும்.

**- அஹமதி தமிழ் திருச்சபை**

இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரின் நாமத்தைச் சமுத்திரத் தீவுகளிலும் மகிமைப்படுத்துங்கள். 24:15

# நீங்கள் சும்மா இருப்பீர்கள்

**"கர்த்தர் உங்களுக்காக யுத்தம் பண்ணுவார்: நீங்கள் சும்மாயிருப்பீர்கள்"** (யாத். 14:14) என்றான். மோசேயின் மூலமாக கர்த்தர் இஸ்ரவேல் மக்களுக்கு இந்த வாக்குத்தத்தத்தைக் கொடுக்கிறார். முன்னால் ஆழமான சமுத்திரம்: பின்னால் எகிப்தியரின் பட்டயம். அப்பொழுது ஜனங்கள் மிகவும் பயந்தார்கள். அப்பொழுது கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டார்கள் (யாத். 14:10). இதுதான் அவர்கள் செய்த ஒரு நல்ல காரியம். ஒவ்வொரு நாளும் நாம் கர்த்தரை நோக்கிக் கூப்பிடும் போது அவர் நமக்கு வாக்குத்தத்தம் தந்து நமக்காக யுத்தம் பண்ணுவார். அவர் நமக்கு இரட்சிப்பை அருளுகிற தேவன். **"இந்த ஏழை கூப்பிட்டான், கர்த்தர் கேட்டு அவனை அவன் இடுக்கண்களுக்கெல்லாம் நீங்கலாக்கி இரட்சித்தார்"** (சங். 34:6). சும்மா இருப்பது என்றால் கை கட்டிக் கொண்டு வேடிக்கை பார்ப்பது அல்ல. கை முடக்கிக் கொண்டு தூங்குவதும் அல்ல.

**1. விசுவாசம்:-** இருதயத்தில் கர்த்தரை விசுவாசிக்க வேண்டும். அவர் நமக்காக யுத்தம் பண்ணுகிற தேவன் என்று விசுவாசிக்க வேண்டும். தாவீது தேவனை விசுவாசித்தான்: கோலியாத்தை முறியடித்தான். நாம் விசுவாசிக்கும் போது ஆண்டவரை நமது வாழ்வில் அனுமதிக்கிறோம். அவர் சேனைகளின் கர்த்தர். நமக்காக யுத்தம் செய்பவர். ஒரு அற்புதம் நடைபெற வேண்டுமானால் நாம் தேவனை முழுவதுமாய் சார்ந்து அவரையே விசுவாசிக்க வேண்டும்.

**2. கீழ்ப்படிதல்:-** "கிரியையில்லா விசுவாசம் செத்தது" விசுவாசிப்பவர்கள் தேவனுடைய வசனத்துக்குக் கீழ்ப்படிந்து நடக்க வேண்டும். இது ஆண்டவர் விரும்புகிற காரியம். மோசே தேவன் சொன்னபடி செய்தான். அநேக இடங்களில் வேதத்தில் இதை வாசிக்கிறோம். தேவன் சொன்னதை முற்றிலுமாய் விசுவாசித்து கீழ்ப்படிந்ததால் சிவந்த சமுத்திரம் இரண்டாய் பிரிந்தது. தேவனுக்குக் கீழ்ப்படியும் ஒரு மனிதனின் வாழ்வில் தேவன் அற்புதங்களைச் செய்வார். மகத்தான வெற்றியை தருவார்.

**3. சுமத்தல்:-** ஆண்டவருடைய வசனங்களை இருதயத்திலே சுமக்க வேண்டும். இரவும் பகலும் அவருடைய வேதத்தில் தியானமாயிருக்கிற மனுஷன் பாக்கியவான். சும்மா இருக்கிற நேரங்களை சுமக்கிற நேரங்களாக, அவருடைய வசனத்தை தியானிக்கிற நேரங்களாக மாற்றுவோம். அவருடைய வாக்குத்தத்தத்தை இருதயத்திலே விசுவாசிக்கிறவர்களாய் (சுமந்தவர்களாய்) செங்கடலை கடந்து சென்றார்கள். "வேதத்தை நீ சுமக்க, அது உன்னை சுமக்கும்" என்பார்கள்.

ஆண்டவர் நமக்காக சிலுவையில் பெரிய யுத்தம் செய்து வெற்றி பெற்றார். அதுதான் ஈஸ்டர். இந்த வெற்றி அவரை விசுவாசிக்கிற நம் ஒவ்வொருவருக்கும் உண்டு. பாவத்தின் சம்பளமாகிய மரணத்திலிருந்து நம்மை விடுவிக்க அவர் பாடுகளை சுமந்தார். இலவசமாக நமக்கு இரட்சிப்பை சம்பாதித்தார். இது அவராலே உண்டானது. நாம் இதை விசுவாசிக்க வேண்டும். அவர் காட்டும் வழியில் கீழ்ப்படிந்து செல்ல வேண்டும். அவர் தந்த வாக்குத்தத்தத்தை சுமந்தவர்களாய் முன்னேற வேண்டும். தேவன் நம் வாழ்விலும் பெரிய அற்புதங்களைச் செய்வார். ஆமென்: அல்லேலூயா!.

**கர்த்தரின் அன்பில்**
**சகோ. கிறிஸ்டோபர் தேவராஜ்**

பலத்த ஜனங்கள் உம்மை மகிமைப்படுத்துவார்கள்: கொடூரமான ஜாதிகளின் நகரம் உமக்குப் பயப்படும். ஏசா. 25:3



ஒரு ஊரில்

# குடிமகனே!

ஒரு குடிகாரன் தன் குடிப் பழக்கத்தை விட்டுவிட பல முயற்சிகளை மேற்கொண்டான். எவ்வளவோ முயன்றும் முடியாமல் போகவே, அவன் சோர்ந்து அமர்ந்து இருந்துவிடவில்லை. “முயற்சி உடையார் இகழ்ச்சியடையார்” என்ற உணர்வில் சூரியனைப்போல் அயர்வின்றி தனக்கிருந்த குடிகாரன் என்ற அடைமொழிப் பெயரை அழித்து விடவேண்டும் என்று அயராது முயன்று கொண்டிருந்தான். நாட்கள் நகர்ந்து மாதங்களானது: மாதங்கள் மறைந்து ஆண்டுகளானது. ஒருமுறை பக்கத்து ஊரில் வாழ்ந்து வந்த ஒரு ஞானியை சந்தித்து ஆலோசனை பெற எண்ணினான். அதன்படி ஞானியைத் தேடி அவர் இருக்குமிடத்திற்கு வந்தான். ஞானியோ தனக்குரித்தான ஞானத்திலும், தியானத்திலும், தன் பக்தி விருத்திக்கான கானத்திலும் மூழ்கி நாட்களை கரைத்துக் கொண்டிருந்தபடியால் குடிகாரனுக்கு ஞானியை சந்திப்பது குதிரைக் கொம்பாகவே இருந்தது. முன் வைத்த காலை பின் வைப்பது மூடனுக்கு உகந்தது: நானோ என்ன நேர்ந்தாலும் ஞானியை சந்தித்தே தீருவேன் என்ற உறுதியில் தடைகளை ஏணிப் படிக்கற்களாக எண்ணி முயற்சியில் முன்னோக்கி சென்றான். சில நாட்கள் கழித்து ஞானியை சந்திக்கும் வேளை பிறந்தது.

பின் தன் குடிப் பழக்கத்திற்கு விடுதலை கொடுக்க நல்வழி சொல்லுங்கள் என்று ஞானியை வேண்டி நின்றான் குடிகாரன். குடித்து வெறித்திருந்தாலும் குடிகாரனுக்குள் தான் நல்லதொரு மனிதனாக இந்த சமுதாயத்தில் வாழ வேண்டும் என்ற தாகம் நிறைந்திருக்கிறது என்பது ஞானியின் எண்ணத்திரையில் பதிவானது. ஞானியோ குடிகார மனிதனை சற்று திகைப்புடன் ஒருசில நிமிடம் நோக்கி நின்றார். குடிகாரனோ ஞானி நம்மை அலட்சியமாய் அனுப்பிவிடுவார் என்ற சஞ்சலத்தில் “ஐயா தயவு செய்து எனக்கு ஒரு வழி சொல்லுங்கள்” என்று மீண்டும் கெஞ்சி நின்றான். ஞானி சற்று புன்முறுவலோடு குடிகார மனிதனை பார்த்து நீ நாளை மாலை என்னை வந்து பார் உனக்கு பதில் சொல்கிறேன் என்று சொல்லி குடிகாரனை அனுப்பிவிட்டார்.

மாலை மயங்கும் வேளையில், சூரியனும் இருக்கவா போகவா என்று எண்ணிக் கொண்டிருக்கும் வேளையில் குடிகாரன் ஞானியை சந்திக்க மீண்டும் வந்தான். குடிகாரனைப் பார்த்தமாத்திரத்தில் தான் வசித்த வீட்டின் தூணைக் கட்டிப் பிடித்துக் கொண்டு “ஐயோ என்னை விட்டுவிடு... என்னை விட்டுவிடு...” என்று கூக்குரலிடத் தொடங்கினார் ஞானி. இதை கவனித்த குடிகாரன் எனக்கு போதை இருக்கிறது. ஆனால் இந்த ஞானிக்குள் என்ன வாதை இருக்கிறது என்று தனக்குள் எண்ணினான். ஒருவேளை தன்னை கேலி செய்வதற்காக ஞானி இப்படி நடந்து கொள்ளுகிறாரோ! என்று குடிகாரன் தனக்குள் நினைத்தாலும், நீங்கள் தானே தூணைப் பிடித்துக் கொண்டிருக்கிறீர்கள். அதை நீங்கள்தானே விடவேண்டும் என்று குடிகாரன் ஞானியை பார்த்து சொன்னான். மிக சரியாய் சொன்னாய். நான் தூணைப் பிடித்துக் கொண்டு நின்றது போல நீதான் குடியைப் பிடித்துக் கொண்டிருக்கிறாய்: நீ தான் குடியை விடவேண்டும் என்று ஞானி குடிகாரனைப் பார்த்துச் சொன்னார்.

**“அப்பொழுது, பேதுரு அவரை நோக்கி: இதோ, நாங்கள் எல்லாவற்றையும் விட்டு, உம்மைப் பின்பற்றினோமே”** (மத். 19:27) என்றார். அதற்கு இயேசு, என் நாமத்தினிமித்தம் விட்டவனெவனும் **“நித்திய ஜீவனையும் சுதந்தரித்துக் கொள்ளுவான்”** (மத். 19:29) என்றாரே. தேவையற்றதை நாமும் விட்டு விட்டால் நித்திய ஜீவனைப் பெறலாமே! கர்த்தருக்கு ஸ்தோத்திரம்.

**கர்த்தரின் கிருபையில்**
**லிடியா ஆ. தாஸ்**

## ஊழியம் செய்ய இவர்களுக்காக ஜெபிக்கிறீர்களா!

**தலைவர்**
சகோ. ரவிச்சந்திரன்
66889706 / 23913675

**செயலாளர்**
சகோ. ஸ்டாலின்
66021072

**பொருளாளர்**
சகோ. விசு
97686317

**பெண்கள் ஐக்கிய தலைவி**
Sis. ஜெயக்கொடி ஜான்வெஸ்லி
99145593 / 23731904

**வாலிப ஐக்கிய தலைவர்**
சகோ. அற்புதராஜ்
60692485



Bro. சாலொமோன் & குடும்பம் (சபையின் உறுப்பினர்கள்) நிரந்தரமாக இந்தியா செல்வதால் சபையின் நினைவு பரிசு வழங்கப்படுகிறது

**சபையின் அஞ்சல் பெட்டி விலாசம்**

——(Your Name), P.Box No-46795, 64018-Fahaheel, Kuwait

ஜெப விண்ணப்பங்களை அனுப்புவீர்களானால் உங்களுக்காக ஜெபிக்கிறோம்

**Church website: www.ahmaditamilcongregation.org**
**Church E-mail ID: ahmaditamil.kw@hotmail.com**

சபையின் வாகனத் தேவையின் அழைப்புக்கு: 65868048

**Private Circulation only**